DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRAT COURT NO. II, VILLUPURAM

| CC.287/2022 | | | |
|---|---|---|---|
| Prosecution Witness: 3 | | | |
| Name | லட்சுமி | Caste | |
| Father's Name/ Husband Name | சக்திவேல் | Religion | |
| Village | பக்கிரிபாளையம் | Age | 34 |
| Taluk | | | |
| A1 and A2 present. | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.08.2023

சாட்சியை கண்டமங்கலம் பெண் தலைமை காவலர் 1311 திருமதி.பிரபாவதி நீதிமன்றத்தில் சாட்சியாக அடையாளம் காண்பித்தார்.

**முதல் விசாரணை**

**(அ)** நான் தற்போது பக்கிரிபாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அசா1 எனது கணவர். அசா2 எனது கொழுந்தனார். ஆஜர் எதிரிகளை தெரியும். எங்களுக்கும் எதிரிகளுக்கும் வரப்பு சம்மந்தமாக பிரட்சனையிருந்து வந்தது. சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மாலை சுமார் 4 மணியளவில் நானும், அசா1 மற்றும் அசா2 நிலத்திற்கு சென்றுகொண்டிருந்தபோது எதிரிகள் அசா2 ஐ தாக்கினார்கள். நான் சத்தம் கேட்டு வந்து பார்த்தபோது எதிரிகள் அசா2ஐ கீழே தள்ளி இரும்புராடு அல்லது தடியா சரியாக நினைவில்லை. அதனை கொண்டு தாக்கினார்கள்.

(2) நான் உடனே அசா1ஐ கூப்பிட்டு சண்டையை விலக்க சென்றேன். அப்பொழுது எதிரிகள் அசா1யும் என்னையும் கீழே தள்ளினார்கள். மேலும் எதிரிகள் எங்களை பார்த்து அசிங்கமாக பேசினார்கள். பின்பு காயம் அடைந்த அசா2ஐ வெங்கடேஷ்வரா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். எனக்கு வெளிகாயங்கள் ஏற்படாததால் நான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

(1) எனது கொழுந்தனாருக்கும் எதிரிகளுக்கும் சண்டை நடந்தபோது நான் எங்கள்

நிலத்தில் 30 அடி துாரத்தில் மாட்டிற்கு புல் அறுத்துக்கொண்டிருந்தேன். சத்தம்கேட்டு வந்து பார்த்தேன் என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையில் சம்பவம் நடப்பதற்கு முன்பாக எந்த முன்விரோதமும் இல்லை. எதிரிகள் எனது கொழுந்தனாரை எந்த ஆயுதத்தால் அடித்தார்கள் என்று சரியாக சொல்லமுடியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இரண்டு நாட்கள் கழித்து போலிசார் சம்பவ இடத்தில் வைத்து என்னை விசாரணை செய்தனர்.

(2) போலிசார் விசாரணையில் சண்டையை மறிக்க சென்றபோது எதிரிகள் என்னை கீழே தள்ளிவிட்ட விவரத்தை சொல்லியுள்ளேன். அதுபோல் நிலத்திலிருந்து ஓடிவந்து பார்த்தேன் என்ற விவரத்தையும் சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்த சமயத்தில் ரோடு போடுவதற்காக வேலையாட்கள் சுமார் 20 நபர்கள் சம்பவம் நடந்த இடத்தின் அருகே இருந்தனர். நான் சொல்வதுபோல் எதிரிகள் இருவரும் எனது கொழுந்தனாரை தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவருக்கு வேறு எங்கோ ஏற்பட்ட காயத்தை வைத்து எனது கணவர் கொடுத்த பொய் புகாரிற்கு அனுசரணையாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

(Sd/-V.Akila)
Judicial Magistrate No.II,
Villupuram